1973 டிசம்பர் 1]

அங்கே பருப்பு வகைகள் 'பல்ஸஸ்' நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதற்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அண்ணு பண்ணையில் தற்பொழுது 1,000 ஏக்கர் நிலம்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். 1,000 ஏக்கரை கூடுதல் ஆக்கவேண்டும் என்ற திட்டம் இருந்ததே, அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, நான் 1,000 ஏக்கர் பயிராகிவிட்டது என்று சொல்லவில்லை. தற்பொழுது பண்ணையில் 1,000 ஏக்கர் இருக்கிறது. பெரும் பகுதி பயிர் ஆகிறது. ஆயிரம் ஏக்கரும் பயிர் ஆனதற்குப் பிற்பாடு பண்ணையோடு சேர்ப்பதற்குத் தகுந்த நிலங்கள் இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதற்கு அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : அண்ணு பண்ணையில் விவசாய ஆராய்ச்சி நடைபெறுகிறபொழுது உரம் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் பர்டிலைஸர்ஸ் குறைவாகக் கொடுத்தாலும் நல்ல முறையில் பயன்தரக்கூடிய அளவுக்குப் பயிர் வகைகள் போட்டுக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : அங்கேகூட குறைந்த அளவிலே உரத்தைக் கொடுத்து, அதிலே நல்ல பயிர் வருகிற அந்த ஆராய்ச்சி என்று தனியாக நடைபெறவில்லை. அந்த ஆராய்ச்சி வேறு பல பண்ணைகளில் நடைபெறுகிறது. உரத்திற்குப் பதிலாக பவுடர்—பாக்டீரியா, அதாவது நுண் பயிர் பவுடர், விதையிலே சேர்த்து விதைத்தால், காற்றிலிருக்கிற நைட்ரஜனையும் சேர்த்து பயிருக்கு உணவு ஊட்டும் இருக்கின்றன. அவை விவசாயிகளுக்குக் கொஞ்சம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதுகூட இந்தப் பண்ணையில் பரிட்சை செய்து பார்க்கப்பட்டது.

வேளாண் பணிக்கழகம்.

* 558. **வினு—திரு. எம். சுரேந்திரன்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு, அக்டோபரிலிருந்து வேளாண்பணிக்கழகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், இத்திட்டத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

Allotment of tractors

*559 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of tractors, indigenous and foreign allotted to the districts of Chingleput, North Arcot and Madras during 1970–71, 1971–72 and 1972–73;

(*b*) the number actually delivered;

(*c*) whether there has been any delay in the delivery of these tractors;

(*d*) if so, the reasons therefor ; and

(*e*) the action taken by the Government to expedite the allotment of these tractors ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். பலராமன் : டிராக்டர்கள் ஒதுக்குவதில் வட ஆற்காடு மாவட்டத்திற்குக் குறைவாகவும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அதிகமாகவும் கொடுத்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் அப்படிக் கொடுக்கப்பட்டது? ஏனென்றால் தஞ்சைக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் வடஆற்காடு மாவட்டம்தான் உணவு உற்பத்தியில் அதிகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அங்கே விவசாயிகள் டிராக்டர்கள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அதற்குப் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டிராக்டர்களைப் பொறுத்த வரையில் விவசாயிகள் எவ்வளவு கேட்கின்றார்களோ அவ்வளவையும் கூடியவரையில் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

@ 422-427-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.